## 24. தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

---

### 24.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

அலுவலகத்தினால் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புகள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 24.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**பாதீட்டு முரண்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 530,000 மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 23 சதவீதம் முதல் 27 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 24.3 செயலாற்றல்

---

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

2013 ஆம் ஆண்டின்போது நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்த 527 முறைப்பாடுகள் மற்றும் 2014 ஆம் ஆண்டின்போது கிடைத்த 1,087 முறைப்பாடுகளுடன் மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1,614 ஆக இருந்தது. அந்த முறைப்பாடுகளில் 706 ஐ பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பரீட்சிப்பிற்கு உட்படுத்த முடியாதிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 487 முறைப்பாடுகளின் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 421 முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின்போது நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 54 சதவீதமான அளவிற்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 24.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 18 | 12 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 08 | 02 | 06 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | மொத்தம் | 30 | 17 | 13 |